**SULIT**

**9217/1**
**KESUSASTERAAN TAMIL**
**PEPERIKSAAN PERCUBAAN SPM TAHUN 2024**
தமிழ் இலக்கியம் **படிவம் 5**
**SEPTEMBER**

**2 ½ jam** Dua jam tiga puluh minit

---

## JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU

1. Kertas peperiksaan ini mengandungi dua bahagian: **Bahagian Satu** dan **Bahagian Dua**.

2. Setiap bahagian mempunyai tiga ceraian: **sajak**, **drama** dan **novel**.

3. Jawab **semua soalan** dalam **Bahagian Satu** dan **tiga soalan** dalam **Bahagian Dua**.

| UNTUK KEGUNAAN PEMERIKSA | | |
|---|---|---|
| **Soalan** | **Markah Penuh** | **Markah Diperolehi** |
| **1-3** | **10** | |
| **4-6** | **15** | |
| **7-9** | **15** | |
| **10/11** | **20** | |
| **12 /13** | **20** | |
| **14/15** | **20** | |
| **JUMLAH** | **100** | |

Kertas ini mengandungi 7 halaman bercetak.

[Lihat halaman Sebelah

[எல்லா விடைகளும் **பாடப்பகுதியை ஒட்டியே** அமைய வேண்டும்]

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

**ஈனவழிச் சென்றே நாளும்**
**இயல்பிலாச் செயல்க ளாற்றிப்**
**போனவழி நெறியென் கின்றாய்;**
**பொய்க்கு, மெய் வண்ணம் பூசி**
**ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;**
**உனக்கொன்று சொல்வேன், நல்லோர்**
**ஞானவழி நிற்பாய், நெஞ்சே**
**நல்லுப தேசம் இஃதே!**
- கவிஞர் பொன்முடி

1) இக்கவிதை வரிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 புள்ளி)

2) இக்கவிதை வரிகளில் காணும் **சொல்நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

3) (i) '**ஊனவிழி**' என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

**ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;**
**உனக்கொன்று சொல்வேன், நல்லோர்**
**ஞானவழி நிற்பாய், நெஞ்சே**
**நல்லுப தேசம் இஃதே!**

(ii) இவ்வடிகளின்வழி மனித மனம் **எத்தகைய வழியைப் பின்பற்ற வேண்டுமெனக்** கவிஞர் கூறுகிறார்? (2 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. பிசிரியாந்தையார் நாடக ஆசிரியரின் படைப்புகளில் ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. (i) பாண்டிய மன்னனின் அவைப் புலவர் இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) பிசிராந்தையார் நாடகத்தில் காணப்படும் சமுதாயப் பின்னணி யாது? (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

தங்கம் : ஒளிந்தாடுவோமோ பச்சைக்கிளி?

கொன்றை: ஆடுவோம். ஆனால், ஒன்று வெய்யில் மேற்கில் விழுந்தவுடன் ஒருத்தி மற்றவர்க்காகக் காத்திருக்காமல் ஓடிவிட வேண்டும் வீட்டுக்கு!

பச்சைக்கிளி: நினைப்பு வருகிறது. நான் சின்னவளாயிருந்தபோது, கரடி வந்ததென்று என்னை விட்டு ஓடி விட்டார்கள் கூட வந்த குட்டிகள்! **நடுக்குளத்தில் தத்தளித்தேன் நான்**! அருள் ஒழுகும் கண்ணன் ஒருவன் என் உடன் பிறந்த அண்ணன் போல் வந்து காத்தான் என்னை! அவன் என்னோடு வீட்டுக்கு வந்தான். அடுத்தடுத்து வருவான்; போவான். இப்போது நாம் பிரிவது கூடாது?

தங்கம் : ஒன்று செய்யலாம். அதோ அந்தப் புன்னையடியில் ஒருவரை ஒருவர் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். சேர்ந்தே போக வேண்டும் வீட்டுக்கு.

**(காட்சி 10 பக்கம் 50)**
**உமா பதிப்பகம்**

(i) இச்சூழலில் வெளிப்படும் பச்சைக்கிளியின் பண்புநலன்கள் இரண்டனை எழுதுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் இடப்பின்னணி யாது? (2 புள்ளி)

(iii) **“நடுக்குளத்தில் தத்தளித்தேன் நான்!”** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான காரணம் யாது? (3 புள்ளி)

[15 புள்ளிகள்]

## பிரிவு மூன்று : நாவல்

7. வாடா மலர் நாவலாசிரியரின் **இயற்பெயரைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

8. i) வாடா மலர் நாவலில் **துணைக் கதாபாத்திரங்களுள் இருவரைக்** குறிப்பிடுக (2 புள்ளி)

ii) வாடா மலர் நாவலின் **இடப்பின்னணி** ஒன்றனை எழுதுக. (புள்ளி 2)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

“ஏன் அண்ணா உங்களுக்கும் இந்த ஆடம்பரப் பைத்தியம்! உள்ளன்பு போதாதா?” என்றாள் சுடர்விழி.

“உலக வழக்கம் அம்மா!” என்றேன்.

“என் கணவருக்கு இது பிடிக்காது" என்றாள்.

“அவருக்குப் பிடிக்காது என்றால் உனக்கும் பிடிக்காதா?” என்றேன்.

“ஆமாம் அண்ணா" என்றாள்.

அப்போது அம்மா குறுக்கிட்டு “அப்படித்தானே இவள் மீனும் முட்டையும் சாப்பிடாமல் விட்டு விட்டாள். மெலிந்து போகிறாள்" என்றாள்.

பாருங்கள் அண்ணா! மெலிந்து போனால் என்ன? உடம்பில் நோய் இல்லாமல் இருந்தால் போதாதா?” என்றாள் சுடர்விழி.

“இதோ, குழந்தைவேல் புலால் சாப்பிடுவதில்லை. பூங்கொடி நிறையச் சாப்பிடுகிறாள். இதில் என்ன தப்பு?” என்றால் அம்மா.

சுடர்விழி என்னைப் பார்த்தாள். “இந்த அத்தைதான் சொல்லிக் கொடுத்தாள். நான் சின்னப் பெண்ணாக இருந்தபோது கற்றுக் கொண்டது இது. சித்தியின் விருப்பம் போல் நடந்துகொள் என்று அந்தக் காலத்தில் சொன்னாள். **அதனால், நன்மையே அடைந்தேன்.** இப்போது கணவரின் விருப்பம்போல் நடக்கிறேன்" என்றாள்.

**(அத்தியாயம் 20, பக்கம் 178-179)**
**மல்தி எடுகெஷனல் புத்தக நிறுவனம், 2020**

i) இச்சூழலில் வெளிப்படும் சுடர்விழியின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக.(2புள்ளி)

ii) இச்சூழலில் காணும் **மொழிநடை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

iii) **“அதனால், நன்மையே அடைந்தேன்”** என்பதன் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது? (2புள்ளி)

Iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் - இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று - கவிதை

பிரிவு ஒன்று - கவிதை

காலை அழகு

வெள்ளி முளைப்பினிலே - அழகு
துள்ளுது வான்பரப்பில்! - சிறு
புள்ளின ஓசையிலே - அழகு
பொங்கி வழியுதடி!

காலைப் பிறப்பினிலே- அழகு
கண்ணைக் கவருதடி!- சிறு
சோலைக் கலகலப்பில்- அழகு
சொரியுது உள்ளத்திலே!

சேவல் அழைப்பினிலே- அழகு
சிந்தையை அள்ளுதடி! மன
ஆவல் அழித்துவிட்டால் - அழ
கானது நம்முடைமை!

தாமரை மொட்டுக்குள்ளே - அழகு
தங்கிக் கிடக்குதடி! - கதிர்
சாமரை வீச்சினிலே - விரிந்து
சஞ்சலம் போக்குதடி!

வீடு துலக்கும்பெண்கள் - குளிர்முகம்
வீசும் ஒளியழகில்- வான்
நாடு விட்டுநகரும் - முழுமதி
நாணி முகம்வெளுத்தே !

***-கவிஞர் வாணிதாசன்***

10) மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக.

(20 புள்ளி)

**அல்லது**

11. கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**மடமை மூடிய இருட்டு**

குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்
குருட்டு உலகமடா - இது
கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும்
திருட்டு உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா (குறுக்கு)

இருக்கும் அறிவை மடமை மூடிய
இருட்டு உலகமடா - வாழ்வில்
எந்த நேரமும் சண்டை ஓயாத
முரட்டு உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா - இதயம்
திருந்த மருந்து சொல்லடா

விளையும் பயிரை வளரும் கொடியை
வேருடன் அறுத்து விளையாடும் - மனம்
வெந்திடும் தோட்டக்காரனிடம்
மிரட்டல் வார்த்தைகளாடும் - பல
வரட்டுக் கீதமும் பாடும் - விதவிதமான
பொய்களை வைத்துப்
புரட்டும் உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா - இதயம்
திருந்த மருந்து சொல்லடா

அன்பு படர்ந்த கொம்பினிலே ஒரு
அகந்தைக் குரங்கு தாவும் - அதன்
அழகைக் குலைக்க மேவும்
கொம்பு ஒடிந்து கொடியும் குலைந்து
குரங்கும் விழுந்து சாகும் - சிலர்
குணமும் இதுபோல் குறுகிப் போகும்
கிறுக்கு உலகமடா - தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா - இதயம்
திருந்த மருந்து சொல்லடா

*-கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்*

i) இக்கவிதையில் காணப்படும் **அணிநயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)

ii) இக்கவிதை உமக்குள் ஏற்படுத்திய **படிப்பினை** மூன்றனை விளக்கி எழுதுக (10 புள்ளி)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12. **பிசிராந்தையாரின் பண்புநலன்களை** விளக்கி எழுதுக. (20 புள்ளி)

**அல்லது**

13. பிசிராந்தையார் நாடகத்தில் உள்ள **துணைக்கருப்பொருள்களை** விளக்கி எழுதுக.
(20 புள்ளி)

## பிரிவு மூன்று: நாவல்

14. (i) வாடாமலர் நாவலில் **முருகய்யாவின் பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.
(10 புள்ளி)

(ii) வாடாமல்ர் நாவலின் **சமுதாயப் பின்னனி** மூன்றனை விளக்கி எழுதுக.
(10 புள்ளி)

**அல்லது**

15. (i) வாடாமலர் நாவலில் **கனகத்தின் பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.
(10 புள்ளி)

(ii) வாடாமலர் நாவலின் **உத்திகள்** மூன்றனை விளக்கி எழுதுக.
(10 புள்ளி)

**தேர்வுத்தாள் முடிவுற்றது**

**KERTAS PEPERIKSAAN TAMAT**